**தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப் படாமை<br>2. பெறுகை நடவடிக்கை போதியளவு திட்டமிடப்படாமை<br>3. உள்ளக கணக்காய்வில் காணப்பட்ட குறைபாடுகள் | 2.2.2<br>2.3.1<br>2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செய்பணிகள் நிறைவேற்றாமை | 2.2.1 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.6 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் | 1. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.4 |
| | | 2. | மனிதவள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்பிக்கப்படுகின்றது. | 1. | மிகை ஏற்பாடு ஒதுக்கியிருந்தது. | 2.5.1 |
| | | 2. | பொது வைப்புக்கணக்கில் குறைபாடுகள் | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செய்பணிகள்

(அ) மாகாணங்களுக்கு இடையே மற்றும் ஒட்டுமொத்த இலங்கை மட்டத்தில் கூட்டுறவு மன்றங்கங்கள் மற்றும் சங்கங்கள் பதிவு செய்தல்.

(ஆ) பதிவு செய்துள்ள கூட்டுறவு மன்றங்கள் மற்றும் சங்கங்களின் அலுவல்களை நெறிப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திக்கு உரிய அலுவல்கள் மேற்கொள்ளல்.

(இ) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துடன் கூட்டிணைந்து தேசிய கொள்கை ஒன்றின் கீழ் கூட்டுறவு தொழிலாளர் அலுவல்களை நெறிப்படுத்தல்.

(ஈ) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உதவுதல்.

(உ) அரச கொள்கைகளை செயற்படுத்துவதற்காக அபிவிருத்தி சார்ந்த பங்களிப்பினை வழங்குதல்.

### 2.2 செயலாற்றுகை

#### 2.2.1 செயல் நடவடிக்கை திட்டத்திலுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை

மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தினால் கூட்டுறவு தொழில் பிரபல்யப்படுத்தும் மேம்படுத்துதல் குறிக்கோள்களுடன் கூட்டுறவு கிராமங்கள் நிறுவும் செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டு ரூபா 10 மில்லியன் வருடாந்த ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், அந்த செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டிய செய்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் எதிர்பாராத வெளியீட்டு மட்டத்தை (out put) அடைந்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கூட்டுறவு சங்கங்களில் இருந்து 108 நிதிக்கூற்றுக்கள் பெற்றுக் கொள்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 45 சங்கங்களில் இருந்து 59 நிதிக்கூற்றுக்கள் மாத்திரம் கிடைத்திருந்தது. அவற்றில் 28 நிதிக்கூற்றுக்கள் 2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இருந்ததுடன் 2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் என ஒரு சங்கத்தினால் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பித்திருந்த 59 நிதிக்கூற்றுக்களில் 30 இன் கணக்காய்வு அறிக்கை 2018 ஜுன் 10 திகதி அளவில் வழங்கியிருந்துடன், 15 நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வு அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஆ) கூட்டுறவு சங்க திருத்திய சட்டத்தின் 43(அ)(3) பிரிவின் பிரகாரம் 2017 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டியிருந்தவாறு கணக்குகள் உரிய முறையில் சமர்பித்திருக்காத சங்கங்கள் தொடர்பாக சங்கத்தில் கூட்டங்களை கூட்டுவதற்கும் மற்றும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் திட்டமிட்டிருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டுகளின் போது சமர்பித்திருந்த 12 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு விடயங்கள் 2018 ஜுலை 10 திகதி அளவிலும் பூர்த்தி செய்து அறிக்கைகள் வழங்கியிருக்கவில்லை.

(ஈ) 2017 செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 52 கூட்டுறவு சங்கங்களில் இருந்து சந்தா பணம் சேகரித்திருக்க திட்டமிட்டிருந்த போதிலும் 23 சங்கங்களில் இருந்து ரூபா 21,401,908 தொகை சந்தா பணம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(உ) கூட்டுறவு தொழிலை வலுப்படுத்துவதற்காக கூட்டுறவு நிதியத்திலிருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 20 மில்லியன் கடன் வழங்குதற்காக மீளாய்வாண்டின் போது திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கடன் தொகை ஏதும் சங்கங்களுக்கு வழங்கியிருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்திற்கு உரிய செயற்படாத கூட்டுறவு சங்கங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன்கள் தொடர்பாக நிதிய முகாமைத்துவ குழுவிற்கு தொடர்புபடுத்தி தீர்மானம் பெற்றுக்கொள்ளல் மற்றும் எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 திகதி அளவில் செயற்படாத கடன்களை செயற்படும் கடன்களாக மாற்றி அல்லது சங்கங்களின் கடனை பதவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பதிவினை இரத்து செய்து ஒழித்தல் அலுவல்களுக்காக 16 கூட்டுறவு சங்கங்களில் இருந்து “50(அ)” அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் 24 சங்கங்களில் ஏலதாரர்கள் நியமனம் செய்தல் முடிவுறுத்தல் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஆண்டின் போது அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஏ) 2016 ஆண்டிற்காக புள்ளி விவர அறிக்கை வெளிப்படுத்தல் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயலாற்றுகை சுட்டி(KPI) தயாரித்து 2017 நவம்பர் 15 திகதி அளவிலும் அறிக்கை விநியோகிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 2018 ஜுன் 30 திகதி அளவிலும் அதற்குரிய அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை. அறிக்கை

தயாரித்தல் மற்றும் அச்சு வேலைக்காக ரூபா 1,000,000 இற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகள் வேறு கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுறவு சங்கங்களில் பிணக்குகளை தீர்ப்பதற்காக நீதிமன்றங்களை வலுப்படுத்தும் 700 சந்தர்ப்பங்கள் இலக்காக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அவ்வாறான 177 சந்தர்ப்பங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**2.3 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கள் மற்றும் சேவைகள் பெறல்**

**2.3.1 பெறுகைகளைத் திட்டமிடல்**

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பெறுகை திட்டத்தில் ரூபா 800,000 தொகை செலவிடப்பட்டு தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் இந்த பெறுமதியை மிகைத்து ரூபா 17,834,745 இற்கான வாயு சீராக்கி பொறிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணணி துணைக் கருவிகள் கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) திணைக்களத்தின் நவீனமயப்படுத்தும் அலுவலகங்களுக்காக 2017 ஆண்டின் போது மிகை நிதியத்தில் இருந்து ரூபா 5,990,956 தொகைகள் செலவிடப்பட்டிருந்த போதிலும் அது 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

**2.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

வ/ப இலங்கை மனிதவள அபிவிருத்தி கூட்டுறவு வங்கி சங்கப் பதிவினை 2009 ஆண்டின் போது இரத்து செய்து முடிவுறுத்தல் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2017 திசெம்பர் 31 திகதி அளவில் முடிவாக்கல் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு 09 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் முடிவுறுத்தல் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் திணைக்களத்தினால் ஒழித்தல் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்பித்திருக்கவில்லை.

**2.5 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 48.95 | 48.88 | 0.07 | 0.14 |
| | மூலதன | 15.75 | 15.14 | 0.61 | 3.87 |
| | **மொத்தம்** | **64.70** | **64.02** | **0.68** | **1.05** |
| 2014 | மீண்டுவரும் | 55.58 | 55.54 | 0.04 | 0.07 |
| | மூலதன | 16.40 | 12.74 | 3.66 | 22.32 |
| | **மொத்தம்** | **71.98** | **68.28** | **3.70** | **5.14** |
| 2015 | மீண்டுவரும் | 63.79 | 62.20 | 1.59 | 2.49 |
| | மூலதன | 23.21 | 17.42 | 5.79 | 24.94 |
| | **மொத்தம்** | **87.00** | **79.62** | **7.38** | **8.48** |
| 2016 | மீண்டுவரும் | 64.72 | 61.13 | 3.59 | 5.55 |
| | மூலதன | 11.46 | 11.18 | 0.28 | 2.44 |
| | **மொத்தம்** | **76.18** | **72.31** | **3.87** | **5.08** |
| 2017 | மீண்டுவரும் | 67.53 | 66.31 | 1.22 | 1.81 |
| | மூலதன | 31.50 | 31.21 | 0.38 | 1.21 |
| | **மொத்தம்** | **99.03** | **97.43** | **1.60** | **1.62** |

### 2.5.1 மிகை ஏற்பாடு ஒதுக்கியிருந்தல்

03 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 0.74 மில்லியன் இற்கான மிகை ஏற்பாடு ஒதுக்கியிருந்தமையால் அந்த செலவு விடயங்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 2.17 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியமையால் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 16 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வீச்சு அளவினை கொண்டிருந்தது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்தின் 30101 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.50 | 6.49 | 2.70 | 2.99 | 30.00 | 14.81 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவைக் கடன் அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையில் காணப்பட்ட கடன்மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 1,002,305 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவைக் கடன்மீதி 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலவீச்சு உள்ளனவாக இருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதி மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

**(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் கடன்மீதிகளை அறவீடு செய்யாமை.**

2004 அக்தோபர் 11 திகதி 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலர் ஒருவர் இடமாற்றம் பெற்று சென்று 03 மாதங்களுக்குள் கடன்மீதியை தீரக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த இணக்கக்கூற்றின் பிரகாரம் திணைக்களத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் இடைப்பட்ட காலம் வீச்சு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 308,512 தொகைக்கான கடன்மீதிகள் அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 2.7 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தில் காணப்படும் பொது வைப்புக் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2.95 மில்லியனாக காணப்பட்டது. அவற்றில் 02 வருடங்களை மிகைத்துள்ள (காணி வைப்புகளைத் தவிர) கூட்டுத்தொகை ரூபா 2.63 மில்லியன் இற்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.8 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்காததுடன், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினால் பிரிவின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

### 2.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 2.9.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணியிருக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1978 இன் திசெம்பர் 19 திகதி 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணணிகள் துணைக்கருவிகள் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.9.2 சொத்துக்கள் பதிவு செய்யப்படாமை

2017 ஜூலை 28 திகதி 01/2017 இல் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொம்ப்டிரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனைத்து சொத்துக்கள் தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் திணைக்களத்தினால் 2018 ஆகஸ்ட் 17 திகதி அளவிலும் அந்த தகவல்கள் சமர்பித்திருக்கவில்லை.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

### 2.10.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான மற்றும் வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 49.47 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 05 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 04 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 110 | 88 | 22 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 15 | 05 |
| | மொத்தம் | 150 | 112 | 38 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆண்டின் போது திணைக்கள உத்தியோத்தர்களுக்கு 35 பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 739,725 தொகை செலவிடப்பட்டிருந்தது.